DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. -165/2025

Prosecution PW -1

| | | |
|---|---|---|
| Name | திரு.செந்தில்குமார் | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 06.02.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்பொழுது பொள்ளாட்சி நெகமம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.05.2022ம் தேதி நாகப்பட்டிணம் போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவில் தலைமைக்காவராகப் பணியிலிருந்த போது ஆய்வாளர் ஏ.ராஜேஷ் என்பவருக்கு இரகசியத் தகவலாளி போன் மூலம் கூறிய இரகசியத் தகவலில் மயிலாடுதுறை புதியபேருந்து நிலையம் பொதுக்கழிவறை அருகில் தனக்கு தெரிந்த ஒரு நபர் காலை மாலை இரு வேளை கஞ்சாவை விற்றுச் செல்வதாகவும் தாங்கள் வந்தால் கையும் களவுமாக பிடிக்க உதவுதாக கூறிய தகவலினை பெற்று ஆய்வாளர் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து மேல் அதிகாரிக்கு தகவல் தெரிவித்து 11.30 மணிக்கு நிலையத்திலிருந்து புறப்பட்டு தேவையான உபகரணங்களுடன் என்னையும் தலைமைக் காவலர்கள் முருகவேல், செந்தில் குமார் ஆகியோர்களை அழைத்துக்கொண்டு சுமார் 1.00 மணியளவில் சம்பவ இடமான மயிலாடுதுறை புதிய பேருந்து நிலைய பொதுக்கழிவறை அருகில் சென்று கண்காணித்தபோது, தகவலாளி அங்கு வந்து வெள்ளை நிற பையுடன் வந்தஒரு நபரை அடையாளம் காட்டி விட்டு சென்றுவிட்டார். அந்த நபரை போலிஸ் பார்ட்டி சகிதம் பிடித்து ஆய்வாளர் அடையாள அட்டை காண்பித்து அறிமுகம் செய்துகொண்டு அவரை விசாரிக்க அவர் தன் பெயர் சிட்டிசன் என்றும் பெயர் முகவரியுடன் கூறினார். ஆஜர் எதிரி தான் அந்த நபர். ஆய்வாளர் எதிரியிடம் நீங்கள் கஞ்சா எனும் போதைப்பொருள் வைத்திருப்பதாக தகவல் வந்துள்ளது என்றும், உங்களை சோதனை செய்ய வேண்டும்

என்றும் அவ்வாறு சோதனை செய்ய ஆட்சேபனை செய்யும் பட்சத்தில் நீதித்துறை நடுவர் முன்போ, அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன்போ சோதனை செய்து கொள்ள உரிமை உண்டு என்று கூறியபோது, அதற்கு எதிரி நீங்கள் NIBCID ஆய்வாளர் என்று தெரிந்துகொண்டேன் நீங்களே சோதனை செய்து கொள்ளலாம் என்று கூறினார். ஆய்வாளர் அதை எழுத்து மூலமாக எழுதி எதிரிக்கு சார்வு செய்து எதிரியின் கையொப்பத்தை பெற்று அதில் என்னிடமும், முருகவேல் என்பவரிமும் ஆய்வாளர் சாட்சி கையொப்பம் பெற்று தானும் கையொப்பம் செய்தார். அந்த சோதனை சம்மத கடிதம் அதசாஆ.1. பின்னர் எதிரி வைத்திருந்த வெள்ளை நிற பையை சோதனை செய்த போது, கஞ்சா எனும் போதைப்பொருள் இருந்தது. அதனை நாங்கள் எடுத்துச்சென்ற தராசில் எடைபோட்டுப் பார்க்க 1.500 கிலோகிராம் இருந்தது. பின்னர் எதிரி வைத்திருந்த கஞ்சாவிலிருந்து மாதிரிக்காகவும் பகுப்பாய்விற்காகவும் தலா இரண்டு 50 கிராம் வீதம எடுத்து பிளாஸ்டிக் கவரில் போட்டு காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி SHO சீல் வைத்தார், அதில் நானும் முருகவேலும் சாட்சி கையொப்ம் செய்தோம், எதிரியும் ஆய்வாளரும் கையொப்பம் செய்து சீல் வைத்தார்கள். மீதமுள்ள கஞ்சா 1.400 கிராமை வெள்ளை பையில் நூலால் கட்டி சீல் வைத்தார். அதில் எதிரியிடம் கையொப்பம் பெற்று எங்களிடமும் சாட்சி கையொப்பம் பெற்று SHO சீல் வைத்து ஆய்வாளர் கையொப்பம் செய்தார். பின்னர் ஆய்வாளர் மாதிரி கஞ்சாவைஹய்ம மீதமுள்ள கஞ்சாவையும் மகசரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் முருவேலும சாட்சி கையொப்பம் செய்தோம். கைப்பற்றுதல் மகசர் அதசாஆ.2. பின்னர் எதிரியை குற்ற காரணம் கூறி ஆய்வாளர் கைது செய்து கைது நமுனா சார்வு செய்தார். அந்த கைது நமுனா அதசாஆ.3 பின்னர் எதிரி தமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை தனிநபர் சாட்சிகள் இல்லாததால் போலிஸ் சாட்சிகளாகிய நானும் முருகவேலும் கையொப்பம் செய்தோம். பின்னர் சம்பவ இடத்தை ஆய்வாளர் பார்வையிட்டு என் முன்பாகவும் முருகவேல் முன்பாகவும் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகசர் அதசாஆ.4. பின்னர் 17.15 மணிக்கு எதிரி மற்றும் தடயத்துடன் ஆய்வாளர் நிலையம் வந்து நிலையக் குற்ற எண்.13/2022 பிரிவு 8(c), 20(b)(ii)(B) of NDPS Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தார

குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்

எதிரிக்கு தனியாக சோதனை அறிவிப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். சோதனை அறிவிப்பு, சோதனை சம்மத கடிதம், கைப்பற்றுதல் மகசர், ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவற்றை ஆய்வாளர் எழுதினார். பார்வை மகசரில் குற்ற எண், சட்டபிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை தான் ஆய்வாளரின் விசாரணையின் போது சொன்னேன். நான் முதல் விசாரணையில் சொன்ன நாள் நேரத்தில் சோதனை அறிவிப்பு எதிரிக்கு வழங்கவில்ல என்றால் சரியல்ல. சோதனை சம்மத கடிதம், கைப்பற்றுதல் மகசர், கைது குறிப்பாணை, ஒப்புதல் வாக்குமூலம், பார்வை மகசர் யாவும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக எதிரிமீது போடப்பட்ட பொய்வழக்கு என்றால் சரியல்ல. மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரம் நாள் எந்த தகவலும் வரவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், எந்த தடய பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் தடய பொருட்களும் காவல் நிலையத்தில் பின்னிட்டு தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட(ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்